IN THE COURT OF THE DISTRICT MUNSIF OF ARAKKONAM

O.S.NO.09/2018

| | |
|---|---|
| Deposition of Witness | : PW-2 |
| Name | : முருகேசன் |
| Father's Name /W/o | : த/பெ.ராஜி நாயக்கர் |
| Religion | : இந்து |
| Caste | : - |
| Calling | : - |
| Address | : எஸ்.கொளத்தூர் கிராமம், நெமிலி வட்டம். |

Solemnly affirmation accordance with the provision of Act X 1873 on the day of 21.02.2023.

**குறுக்கு விசாரணை:-**

**1. வாதி மணிகண்டன் என்ன வழக்கு போட்டுள்ளார் என்றால் நிலம் முருகேசன் மணிகண்டனுக்கு கொடுத்ததை இல்லை என்று சொல்கிறார். அதனால் வழக்கு போட்டுள்ளார். நிலத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. அந்த நிலம் யார் பெயரில் இருக்கிறது தெரியுமா என்றால் அதெல்லாம் தெரியாது. முருகேசனுக்கும் மணிகண்டனுக்கும் உள்ள சமாச்சாரம் மணிகண்டன் சொல்லிதான் எனக்கு தெரியும் என்றால் இல்லை. நான் முன்னிலைக்கு நின்று தான் நிலம் வாங்கி கொடுத்தேன். நான் வாங்கி கொடுத்து எவ்வளவு நாள் ஆகிறது என்றால் 20 வருடம் இருக்கும். 20 வருடம் கழித்து வழக்கு போட்டுள்ளார் என்றால் இல்லை. எனக்கு இப்போது தான் தெரியும்.**

**2. வழக்கு சொத்தின் அரசாங்க மதிப்பீடு தெரியமா என்றால் தெரியாது. நான் கையெழுத்து போட்டு 20 வருடம் ஆகிறது என்றால் ஆம். எங்கு வைத்து போட்டேன் என்றால் வீட்டிடம். அவர்களுக்குள் என்ன நடந்தது என்று தெரியாது என்றாலும் மணிகண்டனுக்கு பவ்விய பட்டு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.**